1980 பிப்ரவரி 7]

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : மதிப்பிற்குரிய உதவித் தலைவர் அவர்களே, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நடந்து முடிந்த பார்லிமெண்ட் எலக்‌ஷனிலே பல கிராமங்களில் ஓட்டுப் போடவில்லை என்ற குற்றச் சாட்டு இந்த மன்றத்தில் பரவலாக ஏற்பட்டிருக்கிறது. அதைப் பற்றி கவர்னர் உரையிலே ஒரு வரி கூட சொல்வதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். இது கிராமங்கள் நிலை எவ்வளவு அவலமாக இருக்கிறது என்பதை நன்றாக எடுத்துக் காட்டுகிறது. இந்த மன்றத்திலே எத்தனையோ முறை எடுத்துச் சொன்னாலும் அதைத் கேட்பதே இல்லை. அதற்கு நிவர்த்தி செய்வதும் இல்லை. நானே பல முறை சொல்லியிருக்கிறேன். இருப்பினும் கூட தீர்வு காணவில்லை. பல கிராமங்களிலே போகின்ற பஸ்களை மறிக்கிறார்கள். காரணம் அங்கே பஸ் வசதி அதிகம் இல்லாத காரணத்தினாலே பஸ் விடவேண்டும் என்று கேட்கிறார்கள். என் தொகுதியிலே நிலமலமங்கலத்தில் கூட தேர்தலுக்கு முன்பு ஒரு போராட்டம் ஏற்பட்டது தேர்தலுக்கு. ஒரு மாதத்திற்குள் டவுன்பஸ் விடுவதாக வாக்குறுதி தந்தார்கள். இன்னும் இது வரையில் பஸ் விடவில்லை.

[பிற்பகல் 1-00]

இப்படி இருந்தால் கிராமங்கள் எப்படி நல்ல நிலையை அடைய முடியும் என்று இப்போதே நீங்கள் யோசிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிராம ரோடுகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. ஏற்கனவே போட்ட ரோடுகள் இன்னும் சீர் செய்யப்படாமல் இருக்கின்றன. சென்ற ஆண்டு வெள்ளத்தின்போது மிக அபரிமிதமாக வேலை செய்ததாக கவர்னர் உரையில் சொல்லியிருக்கிறார்கள், ஆனால் சென்ற ஆண்டு உடைத்துக்கொண்ட ரோடுகள். பாலங்கள் இன்னும் சீர்படுத்தபடவில்லை. அதை இப்போது வேண்டுமானாலும் சென்று பார்க்கலாம். ஆகவே அபரிமிதமான வேலை செய்து இருக்கிறோம் என்று சொல்வதில் அர்த்தம் இல்லை.

7 அறிவிப்பு.

பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கட்சித் தலைவர்களைக் கலந்தாலோசித்து எடுத்து முடிவிற்கு இணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. 8—2—80 (வெள்ளிக்கிழமை), 9—2—80 (சனிக்கிழமை) பேரவைக்கூட்டம் இல்லை. 10—2—80 ஞாயிற்றுக்

கிழமை விடுமுறை, 11—2—80 (திங்கட்கிழமை) அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றலும். 12—2—80 (செவ்வாய்க்கிழமை) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதமும்பதில் உரையும். 12—2—80 அன்று கேள்வி நேரம் கிடையாது.

(6) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் தொடர்ச்சி

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்ட ரோடுகள், பாலங்கள், அணைக்கட்டுகள் இன்னும் கட்டி முடிக்கப்படாமல் அப்படியே இருக்கின்றன. இதற்கு முன்பு எல்லாம் வெள்ளம் வந்து அடித்துச் சென்று விட்டால், ஒரு 3 மாத காலத்திற்குள் அவையெல்லாம் சீர்செய்யப்பட்டு விடும். அப்படி இப்போது செய்யப்படாததால் இந்த அரசாங்கம் சரிவர அதை எல்லாம் கவனிப்பதில்லை என்று நன்றாகத் தெரிகிறது. சென்ற ஆண்டுமட்டுமல்ல, அதற்குமுன் வருஷத்தில் வெள்ளத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் அப்படியே இருக்கின்றன. ஆகவே, கிராமங்களை இந்த அரசு புறக்கணிக்கிறது என்று சொல்லிக் கொள்றேன்.

வேலைக்கு உணவுத் திட்டம் என்ற அடிப்படையிலே அரசு அரிசி கொடுக்கிறது. அந்த அரிசி மிகவும் மோசமாக இருக்கிறது. அந்த அரிசி வேலை நடைபெறுகின்றவர்களிடத்தில் போய் சேருகிறதா என்று பார்த்தால் அது சேருவது இல்லை. அரிசியை எந்த டெப்போக்களில் வாங்கிறார்களோ அங்கேயே திட்டம் போட்டு அந்தக் கான்டிராக்டர்கள் விற்று விடுகிறார்கள். அதனாலே அங்கே போய் அது சேருவது இல்லை. பொய் பில் போடுகிறார்கள். பொய் கணக்கு வைக்கிறார்கள். இந்த மாதிரி நிலையில் அந்தத் திட்டம் பெயிலாகப்போகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன், உணவுத் திட்டத்தில் வேலைக்கு ஆட்களை வைத்துச்செய்கிற வேலையைக் கண்காணிப்பது மேஸ்திரிதான். மேஸ்திரிக்கு கொடுக்கவேண்டியதைக் கொடுத்து விட்டால் அவர் வேலை நன்றாக நடந்து இருக்கிறது என்று எழுதிவிடுகிறார். ஆகவே, அங்கே அந்த வேலை சரியாக நடைபெறாமலேயே வேலை நடந்ததாக சான்றிதழ் வருகிறது. வேலைக்கு உணவுத் திட்டம் சரியாகக் கண்காணிக்கப்படவில்லை என்றால் அந்தத் திட்டமே பெயிலாகி போய்விடும், அதை அரசாங்கம் உடனடியாக கவனிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் பிரச்னையைப் பற்றி இங்கே பலர் பேசினார்கள். குடிநீர் திட்டம் எங்கே பார்த்தாலும் பிரமாதமாகச் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். குடிநீர் குழாய்கள் போடப்படுகின்றன.